# விருப்ப மாறுதலில் வாரியம் வழங்கிய வழிகாட்டுதலில் நாம் ஆட்சேனை தெரிவித்து வாரியத்திற்கு எழுதிய கடிதம்


**Central Organisation of Tamil Nadu Electricity Employees**

(Regd. No. 158 / CPT, - Recognised by TNEB - Affiliated : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, MOSQUE STREET,
C H E P A U K,
CHENNAI - 600 005.
Phone : 2 8 5 4 8 5 2 9
2 8 5 1 5 0 3 8
Fax : 2 8 5 1 6 5 7 4

President **S.S.SUBRAMANIAN** | General Secretary **S. RAJENDRAN** | Treasurer **M. VENKATESAN**


நாள் : 06.07.2017

பெறுநர்

**தலைமை பொறியாளர் பணியமைப்பு அவர்கள்,**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை- 600 002.

அய்யா,

பொருள் : விருப்ப மாறுதல் - தொடர்பாக வழிகாட்டுதல் வழங்கியது - எங்களது ஆட்சேபனை - தொடர்பாக.

பார்வை : Rt. CMD/TANGEDO Pro.No.15/ dated : 28/6/17

***

பார்வையில் கண்ட வாரிய உத்தரவின்படி, விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள், நிர்வாக மாறுதல், மற்றும் விருப்ப மாறுதல் தொடர்பாக குழுவின் ஆலோசனையை வாரிய உத்திரமாக வெளியிட்டுள்ளார்கள். இது தொடர்பாக எங்கள் கருத்துக்களையும் ஆலோசனையும் தங்களது நகல் நடவடிக்கைக்காக முன் வைக்கிறோம்.

விருப்ப மாறுதல் தொடர்பாக குழு அமைத்த பொழுது, எங்கள் சங்கத்தின் சார்பாக தொழிற்சங்கங்களின் கருத்துக்களையும் இந்த ஆலோசனை குழு கேட்க வேண்டும் என வலியுறுத்தி கடிதம் கொடுத்திருந்தோம்.

ஆனால், விருப்ப மாறுதல் பிரச்சனை, ஒரு கொள்கை (Policy) ரீதியான பிரச்சனை தொழிற்ங்கங்களை அழைத்து பேசி, திருத்தங்களை செய்து இந்த வழிகாட்டுதலை வழங்கி இருந்தால் அது உதவிகரமாக இருந்திருக்கும். தற்போதைய வாரிய நிர்வாகம் இதில் உரிய போதிய கவனம் செலுத்தவில்லை என்பதை கடும் ஆட்சேபனையுடன் பதிவு செய்கிறோம். வழங்கப்பட்ட வாரிய உத்தரவு வழிகாட்டுதலில் கீழ்கண்டவற்றை நிவர்த்தி செய்திட கேட்டுக் கொள்கிறோம்.

... 2...

விருப்ப மாறுதல் விண்ணப்பிக்கும் காலமான ஜீலை மாதத்தில் இந்த வழிகாட்டுதல் வெளியிட்டதினால், ஊழியர்கள் அலுவலர்கள் அதிகாரிகள் விண்ணப்பம் வழங்குவதிலும் / விண்ணப்பம் பெறுவதிலும் குழப்பமான நிலை நிலவி வருவதால் இந்த உத்தரவு அமலாக்கத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்து பழைய விண்ணப்பத்தை வழங்கலாம் என தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும். களப்பணியாளர் 8 கி.மீ. குள் விண்ணப்பிக்க முடியாது என்பதையும் எழுத்துத்துறைபணியாளர்கள் (Provisional) 25 கி.மீ குள் விண்ணப்பிக்க முடியாது என்பதையும் நீக்க வேண்டும். இது சென்னை-மையம், கோவை மாநகர், திருச்சி மாநகர், மதுரை மாநகர் போன்ற வட்டங்களில் யாருமே விருப்ப மாறுதல் விண்ணப்பம் வழங்க இயலாமல் போகும் நிலை ஏற்படும்.

அதேபோல களப்பணியாளர்கள் கோட்டத்திற்குள் எந்த இடம் என்பதை கோட்டத்திற்க்குள் கேட்பது சரி, ஆனால் வட்டத்தில் பணியாற்றும் ஊழியர்கள் கோட்டம் கோருவது தான் சரி, கோட்டத்திற்குள் குறைந்த பட்சம் 13 முதல், பிரிவு அலுவலகங்கள் இருக்கும் அவர்களுக்கு அந்த கோட்டத்திற்குள் பணிபுரிய வாய்ப்பும் இருந்தது. ஆனால் அதை பறிக்கும் விதமாக தற்போது வெளியான வழிகாட்டுதல் உள்ளது.

பணியாளர்களின் வேலை மற்றும் நடத்தை குறித்து விபரம் தேவையில்லை! ஒழுங்கு நடவடிக்கை விபரம் உள்ள காரணத்தால் - work and conduct என்ற விபரம் குறிப்பிட தேவையில்லை!

அதே போல கடந்த காலங்களில் விருப்ப மாறுதல் விண்ணப்பங்களை அந்தந்த காலத்தில் சமர்ப்பித்தால் அது தகுதியாய் இருப்பின் பதிவேட்டில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட பணியாளர்/அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும். சம்பந்தப்பட்ட பணியாளரின் விருப்பத்தின் பேரிலேயே அது ரத்து செய்யப்பட வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் தற்போது ஒவ்வொரு விருப்ப மாறுதல் விண்ணப்பிக்க பருவ காலத்திலும், சமர்ப்பித்தாலும் விருப்ப மாறுதல் உத்திரவு வழங்கப்படவில்லையெனில், மீண்டும் அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்ற வழிகாட்டுதலை ரத்து செய்ய வேண்டும்.

தாங்கள் வழங்கிய ஊர் மாற்றல் வழிகாட்டுதலில் சில மாற்றங்களை செய்ய வேண்டும் என தற்காலிகமாக கொடுக்கப்பட்டுள்ளது. தங்களது உத்தரவினைஆய்ந்து பரிசீலித்த பிறகு தேவையெனில் மேலும் சில மாற்றங்களை கோர நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**எனவே தலைமை பொறியாளர்/பணியமைப்பு அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து, தொழில் உறவு மேம்பட, உதவிட வேண்டும் எனக்கேட்டுக் கொள்வதோடு, பழைய நிலையிலேயே விருப்ப மாறுதல் விண்ணப்பங்களை அளிக்க தகுந்த உத்திரவு பிறப்பிக்க, கேட்டுக் கொள்கிறோம்.**

**நன்றி,**

**இப்படிக்கு,**
**தங்கள் உண்மையுள்ள,**

**(எஸ். இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்